தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆனி 3, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஜூன் 17, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு."

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். மணி அவர்கள் 22-1-2016 அன்றும், திரு. தே.இரா. இராஜாராம் நாயுடு அவர்கள் 12-2-2016 அன்றும், திரு. து. செல்வராஜ் அவர்கள் 15-5-2016 அன்றும், திரு. நா.சா. பழனிசாமி அவர்கள் 18-5-2016 அன்றும் மற்றும் திரு. நா. நாச்சிமுத்து கவுண்டர் அவர்கள் 20-5-2016 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எஸ். மணி அவர்கள் 2006 முதல் 2011 வரை பொங்கலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த, முறையில் பணியாற்றினார்கள்.

திரு. தே.இரா. இராஜாராம் நாயுடு அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும் மற்றும் 1980 முதல் 1984 வரையிலும் இரண்டு முறை

தளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. து. செல்வராஜ் அவர்கள் 1996 முதல் 2001 வரை உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. நா.சா. பழனிசாமி அவர்கள் 1991 முதல் 1996 வரை கிணத்துக்கடவு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. நா. நாச்சிமுத்து கவுண்டர் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எஸ்.எம். சீனிவேல் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம்.

“மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து 15-வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், 2001 முதல் 2006 வரை திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத்